ஆண்டு சந்தா ரூ. 7. தனிப் பிரதி அணா 2. சிலோன் 15 சதம் REGD. NO 4642

திராவிடநாடு

மலர் 11. 5—4—53 இதழ் 40

குற்றங்கள் குறைவது எப்படி?

கொலைகளும் கொள்ளைகளும் கொடுமையானவைதான்; அவைகளைச் செய்பவர்களைத் தண்டிக்க வேண்டும் என சர்க்கார் சட்டம் செய்து வைத்திருப்பதும் வரவேற்கக்கூடியதுதான்.

வாழப்பிறந்த ஒவ்வொருவரும் அவரவர்கள் இயற்கையான மரணம் தங்களைத் தழுவும் வரையில் இவ்வுலகத்தில் வாழ உரிமை கொண்டுள்ளனர் என்பதும், தனக்குச் சொந்தமான உயிரைக்கூட அவர்கள் மாய்த்துக்கொள்வதும் தவறுதான் — மற்றவர்களின் உயிரைப் போக்குவதும் குற்றம்தான்.

இந்த இழிநிலைகளுக்குக் காரணம் என்ன? இதனைக் களைந்தெறிவது எப்படி?

மனிதர் யாவருக்கும் உயிருள்ளவரை வாழ்வதற்கு வசதியும் சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டிருக்கிறதா?

காரணத்தைக் கண்டறியாது, கண்டறிந்து அதனைக் களைய முற்படாது தண்டனைதந்துவிட்டால்போதுமா? -அதற்குச் சட்டம் தீட்டிவிட்டால் போதுமா?

கோழி கூவுமுன் எழுந்து, காளைகளுடன் காளையாய் மாலைவரை நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடும் உழவன்தான் கஞ்சிக்கு அலைகிறான். தலைமுறை தலைமுறையாய் கைத்தறித் தொழில் செய்தவன்தான் ஊரூராய் அலைகிறான் — கட்டக் கந்தையின்றி — தன் குடும்பத்துடன். மற்றவர்களுக்கு மாடிவீடு கட்டித்தரும் கொத்தன்தான் குந்தக் குடிசையின்றி நொந்த மனதினனாய் நோயுற்ற நிலையில் நடுத்தெருவில் வாடுகிறான்.

உலகை உருவாக்கிய இனம் இன்றும் உயிரோடு போராடிக்கொண்டிருக்கிறது, ஏன் இந்த நிலை?

பஞ்சகாலத்தில் உணவு வினியோகம் துணி வினியோகம் ஆகியவைகளுக்கு எவ்வாறு உற்பத்திச் சாதனங்களை அரசாங்கம் உத்திரவு கீழ்ப்படிய வைக்கிறதோ அதைப்போல எல்லாத் தேவைப் பூர்த்திக்கும் ஏன் வழிவகை செய்யக்கூடாது. இரயில், தபால் முதலிய இலாக்காக்கள் சர்க்காரின்கீழ் உள்ளதுபோன்று பெரிய பெரிய ஆலைகள், பாங்குகள், பண்ணைகள், மடாலயங்கள் ஆதீனங்கள ஆகியவற்றை ஏன் சர்க்கார் கைப்பற்றக் கூடாது? பணத்திலும் வருவாயிலும் பிர்லா, டாடா இவர்களைவிட ஆதீனங்கள் குறைவானவையா? ஆலைகளுக்கரசனைப் பிரபுக்கள் இருப்பதுபோல ஆதீனங்களுக்கு அரசராகத் தம்பிரான்கள் உள்ளனர். முதலாளிக்குக் காவல்-சட்டம்! புரோகிதனுக்குக் காவல்—சம்பிரதாயம்.

தருமம் செய்தோம் — இன்னும் செய்கிறோம்— கடவுளுக்கென்றும், கடவுளைக் காக்கும் பூசாரர்களுக்கென்றும்—தவறான பாதையில்.

அந்நிய நாட்டுக்குக் கள்ளக்குடியேற்றம் செய்கிறார்கள் இந்நாட்டு மக்கள் — அவர்களின் 'விதி' அது எனத் தள்ளிவிட்டு, ஆஸ்ரமவாசிகளுக்கு அன்னதானம்செய்கிறோம் —செய்யத் துணிகிறோம். தர்மத்தின்பெயரால் கல்வி நிலையங்கள், சிகிச்சைச்சாலைகள்ஏற்படுத்துவதை மறந்து, சிலைகளின் சிருங்காரத்துக்குச் செலவழிகிறோம் — அதுதான் தர்மமெனவும் கூறுகிறோம். வாகனங்களுக்குத் தங்கப்பூச்சு செய்கிறோம்—வீடுமுச்சூடும் அழும் லேத வறுமையைப்போக்க மார்க்கம் தேடாமல்!

நாடு இவ்வளவு வறுமையால் வாடுகிறது. வெள்ளித் தேரும், தங்க ரிஷபமும், வெள்ளி இராவணனும் இந்து வீதிகளிலே வாண வேடிக்கையுடன் உலா வருகிறதுகள்—அந்த வகையிலே எண்ணற்ற பொருள் செலவிடப்படுகிறது — தர்மத்தின் பெயரால்! அல்ல, அல்ல! அதர்மத்தின் அடிப்படையில்!

இவைகளுக்காகச் செலவிடும் பணத்தை, குன்றிக்கிடக்கும் உடலினர், குமுறும் நெஞ்சித்தினர், குழிவிழுந்த கன்னத்தினர், எலும்புருவத்தினர், ஏக்கமுற்ற வாழ்வினர் ஆகியோர் வாழும் வகை செய்யப் பயன்படுத்தக்கூடாதா? இவைகளைச் செய்யக்கூடாதா? இவைகளைச்செய்தால் இறைவன் கோபிப்பாரா?— ஆளடிமையாகி, சாண்வயிற்றுக்காக மாடென உழைத்து, ஆமைபென ஒடுங்கி, நாயெனக் காவல் புரிந்து கிடந்து, புழுவெனத் துடித்திடும் ஏழைகள் கோடானு கோடி பேர் "ஆண்டவனே! எமக்குச்சாகா வரம் தாரும்" என்று அலறுகிறபோது.

நாடு இன்று நலிந்திருப்பதற்குக் காரணம் என்ன? பசிகாரக் கூட்டம் ஓர்புறம்! பணக்காரக்கூட்டம் எதிர்புறம்! அபரிமிதமான அளவு உற்பத்தி ஒரு புறம்! கட்டுக்கடங்காத தேவை மற்றோர் புறம். தேன் சொட்டும் நிலை ஒரு புறம்! தேள் கொட்டும்நிலை மற்றோர் புறம்! திருப்தியுற்ற கூட்டம் அர்ச்சிக்கிறது தேவனை—வெள்ளித் தேரின் மீது ஏற்றி. தேய்ந்த வாழ்வினர் அலறுகிறார்கள். மலர் கொண்டு பூஜிக்கின்றனர், முள் தைக்காத வாழ்விலுள்ளோர்; வாழ்க்கையில் வறுமை கொட்டி விஷமேறிக் கிடக்கும் மக்கள், கண்ணீரைக் கொட்டுகிறார்கள். பணம் படைத்தோனின் பன்னீர் அபிஷேகத்தால் பரமன் குளிர முடியுமா, பாரியின் கண்ணீர் அபிஷேகத்தால் கரையாமல் இருக்க முடியுமா?

வறுமையால் வதையும் மக்கள்—தர்மத்தின் இலட்சணத்தைஉணர்ந்தால்—உணர்த்தப் பட்டால்—இருளிலிருந்து வெளிவந்தால் — வெள்ளித் தேர், தங்க ரிஷபம், முத்து ஆரங்கள், மோகரா மாலைகள், மூக்குத் திருகுகள், அலங்கார நகைகள் இன்ன பிற உருவிலே உறங்கிக் கிடக்கும் செல்வம், உண்மையிலே, அறிவு ஒளி கிளம்பினால், பண்புக்கு வழி தேடும் பள்ளிக்கூடங்களாய், பாரிகளின் பராமரிப்புச் சாலையாய், உழைப்பவரின் உல்லாசக் கூடங்களாய், நோயோட்டும் நிலையங்களாய், வறுமை ஒழிப்புக் கருவிகளாய், நீதிக் கோட்டங்களாய், இல்லாமையை இல்லாமற் செய்யும் இலட்சியத்தைப் பரப்பும் வழிகளாய் அமைந்து விடாவோ? இந்தப் பணியை சர்க்கார் ஏன் செய்யக் கூடாது—தர்மத்தின் இலட்சணத்தை ஏன் விளக்கக் கூடாது—மக்களுக்கு.

அதற்கு பதிலாக சர்க்கார் மக்களை மேலும் மாக்களாகும் பணியைச் செய்யத் தூண்டுகிறது. "பரமனை வழிபடுங்கள்—அதுவே உங்கள் வறுமையினைப் போக்கும் மருந்து" இந்த விதமாக எங்கும் சர்க்காரின் பிரதிபிம்பங்கள் மக்களிடை போதித்த வண்ணம் உள்ளன.

நாட்டின் நடமாடும் தெய்வங்கள் நாயினும் கேடாய் நலிவதைக் கண்டும், வீண்விழாக்களும், விபரீத தர்மங்களும் நடைப்பதை நாம் எடுத்துக் கூறினால் நாத்திகர்கள் என நிந்திக்கப்படுகிறோம்.

கற்பனை மதம் நம் மக்களை போதையில் ஆழ்த்தி வைத்திருக்கிறது. அத்தூக்கத்திலிருந்து விடுபட்டால்தான் மனிதனது உள்ளத்தில் புரட்சிக்கருத்துக்கள் வேரூன்ற முடியும். மதப்பிரச்னை தீர்ந்தால்தான் ஆதாரப்பிரச்னை—வறுமைப் பிரச்னை தீர்க்க முடியும். மதச்சேற்றில் அழுந்தியவனை, இடுப்பொடியப் பாடுபடும் பாட்டாளியை அவனது பிற்கால வாழ்வின் நலம் குறித்துச் சேமித்து வைக்கக்கூட மதம் அவனைவிடவில்லை. திருப்பதி செல்கிறான்—மொட்டையுடன் திரும்புகிறான்! உதிரம் சொட்டச் சொட்ட சேமித்த சேமிப்பையும் மதம் மாய்த்துவிட்டது என்பதை அவன் அறிவதில்லை. சூழ்ச்சிக்காரர்கள் வகுத்திருக்கும் சூதுத் திட்டம் எனும் விளக்கமில்லை அவனுக்கு!

ஏனைய நாடுகளிலெல்லாம், உலர்ந்த வாழ்வினர் — ஏன் இத்தகைய வாழ்வு என எண்ணினர் — ஏங்கினர்—கண்டு தெளிந்தனர் — வெகுண்டனர், தம்மைக் குடிசையிலே வறுமையிலே ஆழ்த்தி வைத்திருந்த பிரபுக்களை நோக்கி — கண்ணீர் கனலாக மாறியது — எல்லோரும் வாழப் பிறந்தோம் என்ற நிலையை அடைந்தனர்.

ஆனால், இங்கே இன்னும் மத இருள் கப்பிக் கொண்டிருக்கிறது. மனிதன் விதியின் பயன் என எண்ணிக்கொண்டிருக்கிறான்—தன் தரித்திர நிலைமைக்கு. ஆளவந்தார்களோ, அதற்குத் தூபமிடுகிறார்கள்— மேலும் அவர்கள் அறியாமை இருளிலே ஆழ்ந்து கிடக்க! — அப்பொழுதான் தங்கள் வாழ்வு தேயாமல் செல்லும் என்று!

எனவே, வாழ்வில் கொலை கொள்ளை ஒழிய வேண்டுமானால் வறுமை ஒழிய மக்களின் அறிவைக் கப்பியுள்ள மடமை ஒழிய வேண்டும். மடமை ஒழிய கடவுள்—மதக் கற்பனைகள் அனைத்திலிருந்தும் மக்கள் விடுபடவேண்டும் — அந்தத் திருப்பணியை ஆளவந்தார் செய்ய வேண்டும்—நாட்டினர் நல்வாழ்வில் அக்கறையிருந்தால்!

இன்று நாட்டிலே குற்றங்கள் பெருகி விட்டன.

"மனைவியும் இரண்டு குழந்தைகளும் இறந்துகிடந்தனர் — குடும்பக்கஷ்டம் காரணமாகவே தன்னுடையவும் தன்குடும்பத்தினருடையவும் உயிரைப்போக்கவிரும்பி இம்மாதிரி செய்தார்."

"பட்டப் பகலில் பஸ்ஸை நிறுத்தி பிரயாணிகளைத் தாக்கிக் கொள்ளை"

"குழந்தையின் தங்க வளையலை திருடியவருக்கு இரண்டு மாத கடுங்காவல் தண்டனை."

"ஓடும் ரயிலில் துணி திருடியதாக, 5 மாறு பெயர் உள்ளவர்மீது வழக்கு"

"வேலை வாங்கிக் கொடுப்பதாகக் கூறி ஏமாற்றினார்"

"இரயில்வே ஜங்ஷனில் ஒருவர் பட்டினியால் மாண்டார்"

கொலைகள், கொள்ளைகள், பட்டினிச்சாவுகள் எனப் பட்டியல் தந்த வண்ணமிருக்கின்றன— அன்றாடப் பத்திரிகைகள்.

குற்றங்கள் வளர்ந்தவண்ணமுள்ளன—குறையவில்லை.

போலீஸ் இல்லையா? நாட்டிலே— ஏராளமாக இருக்கிறார்கள்

பின் ஏன் குற்றம் புரிவோரின் தொகை அதிகரிக்கிறது?

இதோ முதலமைச்சர் ஆச்சாரியாரே பதில் கூறுகிறார்:

"நிர்வாகத் திறமை குறைவு காரணமாகத்தான் குற்றங்கள் அதிகரிக்கின்றன என்று நினைப்பானேன்? உண்மையில் பொருளாதார நிலைமையே முக்கிய காரணம் என்றும் சோல்லலாம்"

(6-ம் பக்கம் பார்க்க)

புயல் நிவாரண நிதி

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீர்மானப்படி புயல் நிவாரண நிதி முயறசி வெற்றிகரமாக முடிவுற்று, சேர்ந்துள்ள தொகைக்கு கழகத்தின் சின்னம் பொறித்த கைத்தறி ஆடைகளாக வழங்குவதென முடிவு செய்து அந்த ஆடைகள் தயாரித்து தரும் முயற்சியை மொத்தமாக சென்னை மாகாண கைத்தறி கூட்டுறவு சங்க டைரெக்டர் பொதட்டூர் பேட்டை E. S. தியாகராசன் அவர்களிடம் ஒப்படைத்து அதற்கு முன்பணமாக 5000 (ஐயாயிர ரூபாயும்) தரப்பட்டுள்ளது. சேலைகளும், வேட்டிகளும் ஆயிரக்கணக்கில் தயாரிக்கப் படவேண்டியிருப்பதால், ஏப்ரல் 20-தேதிக்குமேல் நிதி உதவியை வழங்க ஏறபாடுகள் செய்யப்படும் என அறிவித்துக்கொள்கிறேன்.

மு கருணாநிதி,
செயலாளர்,
புயல் நிதிக்குழு.

திராவிடநாடு

காஞ்சி] 5—4—53 [ஞாயிறு

நாகநாடு

★

பண்டிதர், நாகநாடு சென்றிருக்கிறார். பர்மிய முதலமைச்சர் நூ உடன் சென்றிருக்கிறார். இருவரும், நாகர்களை நாகநாடு கேட்கவேண்டாம் என்று அறிவுரை கூறவே சென்றுள்ளனர்!!

நாகர்கள், மலைவகுப்பினர். வெள்ளையரின் துப்பாக்கியும் அவர்களுடைய வீரத்தைத் துளைக்கமுடியாமற் போயிற்று. தமது பண்டைப் பழக்கத்தின்படி, காடும் கானமும், குன்றும் குறிஞ்சியும் நிறைந்த நாடதனில், வாழ்ந்து வருகின்றனர். நாகர்களில், பழமையின் பயங்கரப் பிடியிலிருந்து விலகாத கூட்டத்தினர், 'நரவேட்டை' ஆடியும் வருகின்றனர். தலைகளைச் சீவிக் குவிப்பது, ஒருவிதமான மதச் செயல் என்று எண்ணும் நாகர்கள் இன்றும் உள்ளனர்.

நாகர்கள், 'இந்தியப்பகுதி'யிலும் உள்ளனர்— 'பர்மியப்பகுதி'யிலும் உள்ளனர். இரு பகுதிகளில் உள்ளவர்களும், இதுபோது தனிநாடு தேவை என்ற நாட்டுப்பற்றுணர்ச்சி கொண்டு நாகநாடு நாகர்களுக்கே என்று முழக்கமிட்டு வருகின்றனர். காட்டுக் கூச்சல்! வெறிப்பேச்சு! அர்த்தமற்ற ஆர்ப்பரிப்பு!—என்று கூறி அலட்சியப்படுத்தினார் நேரு. எனினும், முழக்கம் வலுப்பெற்றது. டில்லியும், ரங்கூனும், விழித்துக் கொள்ளவேண்டிய அளவுக்கு நாகநாடு நாகருக்கே! என்ற முழக்கம் வலுவடையவே, பண்டிதரும் நூவும், இப்போது, நாகநாடு சென்று நல்லுரை கூறிவருகின்றனர்.

வந்துள்ள தலைவர்களை நாகர்கள் வரவேற்ற வைபவமும், அவர்கள் தந்த பரிசுகளின் வகையும், அவர்கள் அணிந்திருந்த பழய முறை ஆடை அணிகலன்களின் நேர்த்தியும், அவர்கள் பருகும் பானத்தின் தன்மையும், நாககன்னிகைகளின் ஆடலின் அருமையும், ஆகிய இவைகளைப்பற்றி எல்லாம், தேசிய ஏடுகளில், செய்திகள் பலப்பல வந்துள்ளன.

பண்டிதர் செல்லும் இடமெல்லாம், இப்படித்தான் 'ராஜோபசாரம்' நடைபெறுகிறது, என்ற பல்லவியைத் தேசியத் தோழர்கள் பாட, இந்தச் செய்திகள் பயனளிக்கும்—நிச்சயம் பயனளிக்கும்—ஆனால், நாகநாடு நாகருக்கே என்ற இன முழக்கத்தை அழிக்க, இந்தப் பவனி பயன்தருமா என்றால், நிச்சயம் பயன் ஏற்படாது என்று கூறிவிடலாம். நாகர்களின் தனிநாடு கோரிக்கை உணர்ச்சி அந்த அளவுக்கு உரம்பெற்றிருக்கிறது.

நாகர்களில், 'தலைவெட்டும்' வைதீகக் கூட்டம் மட்டுமல்ல, தன்னரசுக் கொள்கையின் தன்மையை உணர்ந்தவர்கள் ஏராளமாக உள்ளனர். அவர்கள், நேரு—நூ பவனியை, ஏகாதிபத்ய முறை என்று தான் கருதுவார்கள்.

வெள்ளை ஏகாதிபத்யத் தலைவர்கள் இதுபோலவேதான், மலைநாடுகள் சென்று, சோப்பும் சீப்பும் தந்து, காடிக்குட்டியும் கம்பளித் துண்டும் பரிசாகப் பெற்று, பிரிட்டிஷ் ஆட்சியின் மேன்மையை அந்த மக்களுக்கு எடுத்துரைத்து, அந்த மக்களின் ஆடலிலும் பாடலிலும் கலந்துகொண்டு, திரும்புவர். தமது 'தரிசனம்' 'உபதேசம்' போதும், அந்த மக்களைத் திருப்திப்படுத்த, என்றுதான், அந்த நாள் வெள்ளைக்கார வைசிராய்கள் கருதினர். நிறம்தான் பழுப்பே தவிர முறை அதேதான், என்று உலகுக்கு எடுத்துக் காட்டுவதுபோல, நேருவும் நூவும் இப்போது நாகநாடு சென்று, "நல்லவர்களாயிற்றே நீங்கள்! ஏன் இப்படித் தனிநாடு, தனிநாடு, என்று கேட்கிறீர்கள். யாரோ பொல்லாதவர்கள் உங்களுக்குக் கெடுதலான போதனை செய்துவிட்டார்கள். தனிநாடு கேட்பது தவறு—ஆபத்து—அர்த்தமற்றது" என்று கூறுகின்றனர்.

ஏகாதிபத்யம், வெள்ளையர் இங்கிருந்து வெளியேறியபோது டில்லியில் தங்கிவிட்டது, என்பதற்கு, இது மற்றோர் எடுத்துக்காட்டு.

கடந்த இருபதாண்டுகளாக நாகர்கள், நாக நாடு நாகருக்கே என்ற திட்டத்தை உருவாக்கிக் கொண்டு வந்துள்ளனர்.

இந்தத் திட்டத்துக்கு நல்ல ஆதரவு திரண்டதற்குக் காரணமாக இருந்தவர்கள், நாக நாட்டு மாணவர்கள். அசாமில், படித்த கல்லூரி மாணவர்கள், நாகநாடு நாகருக்கே என்ற திட்டத்தைத் தமது மக்களிடம் நல்ல விதத்திலே எடுத்து விளக்கியுள்ளனர். நாகநாடு நாகர்களுக்கே என்ற திட்டத்துக்கு ஆதரவு திரட்ட சில ஆண்டுகளுக்கு முன்பு, பொது ஜனவாக்கெடுப்பு எடுக்கப்பட்டிருக்கிறது, நாகர்கள் அனைவரும், நாகநாடு தேவை என்ற திட்டத்துக்கு ஓட் அளித்துள்ளனர். அது மட்டுமல்ல! இந்திய சர்க்காரின் தேர்தல் நடவடிக்கைகளில், நாகர்கள் கலந்து கொள்ள மறுத்துவிட்டனர். நாகர்களின் 'தனிநாடு' உணர்ச்சி எந்த அளவுக்கு இருக்கிறது என்பது விளங்கவில்லையா! நாகர்களுக்கு நல்லதோர் தலைவனும் கிடைத்துள்ளான் — இளைப்பற்றும் அரசியல் தெளிவும் உள்ள பிசோ எனும், நாகர் தலைவன் நாகநாடு நாகர்களுக்கே என்ற திட்டத்துக்கு, பர்மியப்பகுதியில் உள்ள நாகர்களிடையே பிரசாரம் செய்து ஆதரவு திரட்டி வந்தான். இந்திய சர்க்கார், நாகர் தலைவனைப் பிடித்து ஒப்படைக்கும்படி கேட்டது—பர்மிய சர்க்காரும் அதுபோலவே நாகர் தலைவனைக் கைது செய்தது.

இந்த நிலைமை ஏற்பட்ட பிறகு, நேருவும் — நூவும், நாகநாட்டிலே பவனிவருகிறார்கள்! வெற்றியா கிட்டும்!!

நமது நாடு நமக்கே சொந்தம் இதிலே எந்த அன்னிய நாட்டானுக்கும் அதிகாரம் இருத்தலாகாது, என்று நமது பிறப்புரிமையை எடுத்துரைத்த நமது தலைவனைச் சிறைப்பிடித்தவர்கள் இவர்கள்—என்ற வெறுப்புணர்ச்சியுடன் தான், நேருவையும் நூவையும், தெளிவு பெற்ற நாகர் அனைவரும் பார்ப்பரேயன்றி, உளமார வரவேற்கவா செய்வர்!!

நாகர்களிலே, மிகமிகப் பிற்போக்காக உள்ள சிறு சிறு கும்பல்களை, தலைவெட்டும் கூட்டத்தினரை, தட்டிக் கொடுத்து, அவர்களைத் தம் பக்கம் இழுத்துக்கொண்டால், நாகர்களுக்குள் பிளவு ஏற்பட்டுவிடும், பிளவு கண்டு விட்டால், நாகநாடு நாகருக்கே என்ற திட்டம் கெட்டுவிடும், என்று நேரு கருதுகிறார்—அவர் தர்பார் நடத்தும் டில்லியில் இதற்கு முன்பு இருந்து வந்த வெள்ளைக்கார ஏகாதிபத்ய வைசிராய்கள் எண்ணிக் கொண்டிருந்தது போலவே.

"இந்தியாவுடன் ஒன்று சேர்ந்து வாழுங்கள், நாகர்களே! உங்களுடைய பழக்க வழக்கம் பண்டைச் சம்பிரதாயம் எதனையும் பாழ்படுத்த மாட்டோம், நாட்டு நிர்வாகத்திலே உங்களுக்குப் பூரணமான சுதந்திரம் உண்டு, தனிநாடு என்று மட்டும் கேட்கவேண்டாம்" என்று நாகர்களுக்கு அறிவுரைகூற முன்வந்துள்ள நேருவுக்குப் பக்கத்தில் புன்னகையுடன் நிற்பவர், பர்மியப் பிரதமர் நூ! இந்தியாவுடன் ஒன்றாக இருந்துவந்த பர்மாவில், பர்மா பர்மியருக்கே! என்ற முழக்கம் கிளம்பி, வலுத்து, பர்மா தனி நாடு ஆக்கப்பட்டு, அதற்கு இன்று நூ பிரதமராக இருந்து வருகிறார்! அவரைப் பக்கத்தில் வைத்துக்கொண்டே, நேரு, பேசுகிறார். பர்மா பர்மியருக்கே என்ற திட்டம் வெற்றி பெற்றதன் விளைவுகளில் ஒன்றுதான், நூ! அந்த நூவின் பக்கத்திலே இருந்துகொண்டே நேரு பேசுகிறார், நாக நாடு நாகருக்கே என்று முழக்கமிடாதீர்கள், என்று. இந்தக் காட்சி, காட்டுமிராண்டித் தனத்திலிருந்து விடுபட்டு, அரசியல் அறிவுபெற்றுள்ள நாகர்களுக்கு எத்தகைய எண்ணத்தைக் கொடுத்திருக்கும். பர்மா பர்மியருக்கே! என்று முழக்கமிட்டு, வெற்றிகண்டு இன்று தனிஅரசு நடத்தும் இந்த நூ நாகநாடு நாகருக்கே என்ற நமது நாட்டு விடுதலைத் திட்டத்தைத் தகர்க்க நேருவுடன் கூடிக்கொண்டது, எந்த வகையான நியாயம்! ஏன், பர்மா, இந்தியாவுடன் சேர்ந்திராமல், தனிநாடு என்றாகிவிட்டது. மொழி, கலை, இனம், பழக்க வழக்கம், எனும் பல்வேறு துறைகளில் பர்மியர் வேறு, இந்தியாவில் உள்ளவர்கள் வேறு, என்பதனால் தானே, பர்மா தனிநாடு ஆகவேண்டும் என்ற திட்டத்தை வகுத்தனர் — வெற்றியும் கண்டனர். அதே முறையிலே, நாகர்களுக்கு நாகநாடு கிடைக்கத்தானே வேண்டும். இதைத்தகர்க்க, இருவரும் ஒன்று கூடி பவனி வருகிறார்களே, இது எத்துணை பெரிய அரசியல் அநீதி" என்று நாகர் இனத்திலே உள்ள அரசியல் தெளிவுள்ள யார்தான் எண்ணாமலிருக்கமுடியும்.

"இந்தப்புறத்திலிருந்து என் படைகள் தாக்கும். பர்மா பக்கமிருந்து, பர்மியப் படைகள் தாக்கும், இதோ நூ, என்னுடன் இருப்பதன் பொருள் இதுதான், இருபுறமும் படைகள்! என்ன செய்ய முடியும் உங்களால்!" நேரு-நூ, இருவரும் சேர்ந்து, நாகநாடு சுற்றுப் பயணம் நடத்துவதன் உட்பொருள் இதுதானே. நாகர்கள், 'நாட்டுப் பற்று' எனும், பெரும் பலத்தைப்பெற்றுள்ளனர். நேருவும் நூவும், அமெரிக்காவிடம்பெற்றுள்ள, படை பலத்தைக்கொண்டு, நாகர்களின் நாட்டுப்பற்றைத்தாக்கித் தகர்த்திடமுடியும் என்று எண்ணுகிறார்கள். ஏகாதிபத்யம் வெளியேறவில்லை—டில்லியில் குடிபுகுந்து கோலாகலமாக இருக்கிறது என்பதைத்தான், இந்தப் 'பவனி' காட்டுகிறது.

நாகர்களோ, நாட்டுப்பற்று கொண்டவர்கள் எவரும் பெறக்கூடியதோர் புத்துணர்ச்சி பெற்றுள்ளனர். எனவே, அவர்கள் இந்த ஏகாதிபத்ய மிரட்டலுக்கு அஞ்சப்போவதில்லை. இந்தப் பவனியையும், அது தெரிவிக்கும் மிரட்டலையும் துச்சமெனக் கருதுவதைத் தெரிவிக்கும் விதத்திலேதான், நேரு பேச வந்தபோது, நாகர்கள், கூட்டத்தைவிட்டு வெளியேறிவிட்டனர். ஆசியாவின் ஜோதி, இந்தச் சம்பவம் தரும் பாடத்தைக் கவனிக்காமலிருந்திருக்கமுடியாது. நாக நாடு நாகருக்கே என்ற திட்டத்தை விளக்கி நேருவிடம் ஒரு அறிக்கை தரக்கொண்டுவந்தனர், நாகநாடு இயக்கத் தலைவர்கள், அந்த அறிக்கையைப் பெற, நேருவுடன் இருந்த அதிகாரிகள் மறுத்துவிட்டனர். "நாங்கள் நேருவிடம் தெரிவிக்க வேண்டியது ஒரே ஒரு விஷயம் தான்! நாகநாடு நாகருக்கே! என்ற எங்கள் திட்டத்தைப்பற்றி அவரிடம் கூறவேண்டும். இந்த அறிக்கையில் விளக்கி இருக்கிறோம். இதை அவரிடம் தர மறுக்கிறீர்கள். இனி எமக்கு இங்கே வேலை இல்லை" என்று கூறிவிட்டுச் சென்றனர், நாகர்கள்.

இந்தியாவின் முடிசூடா மன்னன், ஆசியாவின் ஜோதி, அமெரிக்காவின் செல்லப்பிள்ளை, மவுண்ட்பேடனின் நண்பன், எங்கள் நேரு—அவர் பேசினால் இலட்சக்கணக்கிலே மக்கள் கூடுவர், அவர் காந்தியத்திலிருந்து கழிவுப்பொருளை உரமாக்கும் விஞ்ஞானம்வரையிலே கேட்போர் வியக்கும் வண்ணம் பேசுபவர், அவர் பேசப்போகிறார், உலகநிலையை உங்களிடம் விளக்கிக் காட்டுவார், அவர் உரை கேட்க வாரீர், வாரீர், என்று அதிகாரிகள் கூறாமலிருந்திருப்பார்களா! கூறினால் என்ன!! நாகர்கள், கூட்டத்தை விட்டு வெளியேறிவிட்டனர்! கூட்டம் கூட்டமாக வெளியேறும் நாகர்களைக் கண்டு, நேரு திகைத்திருப்பார்—அவர் தெளிவு பெறுவதற்காக, நாகர்கள், நாகநாடு நாகருக்கே! என்ற முழக்கமிட்டவண்ணம் கூட்டத்தைவிட்டு வெளியேறினர்..

மலைவாழ் மக்கள், நாகர்கள்! அவர்களிடையே மலர்ந்திருக்கிறது, தனி அரசு உணர்ச்சி—நேருவைத் தமது நாட்டுக்கு ஓடிவரச் செய்யுமளவுக்கு வளர்ந்திருக்கிறது! நாகர்கள் கேட்கும் நாக நாடு பல வளம் நிறைந்ததல்ல—அங்கே கொற்கையும் பூம்புகாரும், மதுரையும் காஞ்சியும், இருந்ததில்லை! அங்கே சிற்பமும் ஓவியமும், காலத்தை வெல்லும் காவியமும் இல்லை! எனினும், நாகநாடு நாகருக்கே! என்று கூறும் துணிவும், பெற்றாகவேண்டும் என்ற நாட்டுப்பற்றும், பூத்திருக்கிறது. இங்கு? எல்லாம் இருக்கிறது என்பதை, எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள்! வளம் இருக்கிறது, வரலாறு இருக்கிறது—முப்புறம் கடல் இருக்கிறது, துறைமுகங்கள் பலப்பல! முத்து உண்டு, தங்கம் உண்டு, இரும்பும் நிலக்கரியும் உண்டு. எவ்வகையான பயிருக்கும் ஏற்ற மண்வளம் உண்டு, எல்லோரும் இன்புற்று வாழத்தக்க அளவுக்கு இயற்கை வளம் இருக்கத்தான் செய்கிறது. அன்றோர் நாள் வாழ்ந்த இனம், என்று கல்வெட்டுகள் கூறுகின்றன—எனினும்.... எனினும்.... அதோ அந்த மலைவாழ் மக்கள், முழங்க மிடுகிறார்கள், நாகநாடு நாகருக்கே, என்று!—இங்கு? இங்குதான், நேருவின் 'தரிசனத்துக்குத்' திராவிடமக்கள் கூடுகிறார்கள்—அவர், திராவிட மக்களைப்பார்த்து, நான்சென்ஸ் என்று ஏசுகிறாரே!!

நாகர்கள், நேருவுக்கு நல்ல பாடம் கற்பிக்கிறார்கள்.

திராவிடர்கள், நேருவிடம் வசைமொழி கேட்டுக் கொண்டிருக்கிறார்

(5-ம் பக்கம் பார்க்க)

நன்றி அறிவிப்பு

எனது அருமை அண்ணார், எங்கள் அருமைத் தந்தையார் உயர்திரு. ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் அவர்கள் 22—2—53 மாலை 3-30 மணிக்கு சென்னை சர்க்கார் ஜெனரல் ஆஸ்பத்திரியில் உயிர் நீத்தமை குறித்து நண்பர்களும், உறவினர்களும் பொதுஜன ஸ்தாபனங்களும் ஆசிரியர்களும் ஆகியவர்களிடமிருந்து அனுப்பிய அனுதாபம் தெரிவிக்கும் தந்திகளும், தீர்மானங்களும் கிடைக்கப்பெற்று ஆறுதலடைந்தோம். யாவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தங்களன்புள்ள,

ஊ. பு. அ. ரெங்கசாமி
ஊ. பு. அ. சௌ. தீனதயாளன்
ஊ. பு. அ. சௌ. பாஸ்கரன்
ஊ. பு. அ. சௌ. கிருஷ்ணமூர்த்தி
ஊ. பு. அ. ரெ. நாகராஜன்
ஊ. பு. அ. ரெ. ராஜாராம்.

கழுக்குன்றத்துக் கல்லும்—மாயூரத்து மனமும்!!

[அடிகள்]

"புகை பிடித்தால் நோய் உண்டாகும் — உடல் நலம் கெடும் — ஆயுள் குன்றும் — நமக்கும் நல்லதல்ல — பிறர்க்கும் நல்லதல்ல" என்று ஒரு மருத்துவர் கூறுகிறார் என்றால், அவரை அறிவில்லாதவர் என்று யார் கூறுவார்கள்? புகை பிடிப்பதில் தணியாத வேட்கை கொண்டவர்களன்றி வேறெவரும் அந்த மருத்துவனுக்கு முட்டாள் பட்டம் சூட்டமாட்டார்கள். ஆனால் எங்கோ ஒருவர் இருவர் இருப்பார்கள் — புகை பிடித்தல்போன்ற கெடுதல் வேறெதுவும் இல்லை — தெரிந்தும் பிடிக்கிறோம் — உடலை உருக்குலைக்கும் என்பதறிந்தும் விட மறுக்கிறோம் — பழக்கம் கொடியது என்ற பழமொழிக்கு இலக்காகிவிட்டோம் என்று உண்மையை மறையாது கூறுபவர்கள்.

ஆனால் "புகை பிடிப்பதுபோன்ற புனிதமான — புண்ணியமான செயல் வேறெதுவும் இல்லை — புகை பிடிப்பவர்கள் நாட்டில் பெருகினால்தான் நோய் குறையும் — ஆயுள் நீடிக்கும் உடல் நலம் நன்கு பாதுகாக்கப்படும்" என்று கூறுகிறான் ஒரு மருத்துவன் என்றால், அவனைப் பற்றி என்ன எண்ணுவீர்கள்? எண்ணுவதற்கு என்ன இருக்கிறது! இப்படிப்பட்ட ஒருவனை உலகினர் கண்களில் படாத ஒரு இடமாகப் பார்த்து அங்கு கொண்டுபோய் விட்டு விடவேண்டியதுதான். இது கிடக்கட்டும் — அற்ப சங்கதி — புகை பிடித்தல் நல்லதா? கஞ்சா அடித்தல் நல்லதா? அபின் அருந்துவது அழகா? என்பனபோன்ற ஆராய்ச்சி ஏன்? — என்று வறிதே இருந்துவிடுவதற்கும் இல்லையே!

நாட்டுக்கும் மக்களுக்கும் எவையெவை வேண்டப்படாதவையோ அவற்றையெல்லாம் மக்கள் முன்னிலையில் கொண்டுவந்து நிறுத்தி, 'இவைதான் உங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டிகள்' என்று கூறும் வற்றாத அறியாமைஊற்றுக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்துகொண்டு நாட்டை நாசமாக்கும் பணியில் ஈடுபடுவதைக்காணும் போதுதான், அந்த அறியாமை ஊற்றுக்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தி அறிவு வளர்ச்சி உண்டாகும்படி செய்யவேண்டியிருக்கிறது.

இந்நாட்டில் தான் மக்களின் அறிவை வளர்ப்பதற்கென ஒரு தனி இயக்கமே நடத்தவேண்டியிருக்கிறது — நடந்து கொண்டிருக்கிறது.

அந்த அளவுக்கு அறியாமையின் ஆணிவேர்கள் ஆழப்பதிந்துள்ளன. இவற்றை அகற்றுவது அறிவுவளர்ச்சிக் கழகத்தாரின் கடமையாகி விட்டது. ஒன்றின் ஆணிவேரை அகற்றி அதனை இல்லாதொழிப்பதென்பது எளிதில் முடியக்கூடிய காரியமல்ல. சிறிய அறுப்பு (Minor Operation)னால் தீரக்கூடியதல்ல; பெரிய அறுப்புச் (Major Operation) செய்தே தீர்க்க வேண்டிய அளவுக்கு ஆணிவேரின் ஆழம் போய்விட்டிருக்கிறது. எனவேதான் அதற்கென ஒரு தனி இயக்கமே தேவைப்படுகிறது. அறிவும் ஆற்றலும் பெற்ற அனைவருமே இந்த இயக்கத்தில் தான் இருக்கிறார்கள் என்றால் அதன் பொருள் என்ன? அறியாமை தன் உச்சநிலையை அடைந்துவிட்டதென்பதைத் தானே அது எடுத்துக் காட்டுகிறது. அறியாமைக்கு வித்திடுவதையே தம் தொழிலாகக் கொண்ட ஒரு சிலர், அரசியலிலும், மத இயலிலும் முதலிடம் பெற்றுக் கொண்டு செய்துவரும் கொடுமைகளைக் காணும்போது தான், அவர்களுடைய பித்தலாட்டங்களான கடவுள், மதம் ஆகியவற்றை மக்கள் முன்னிலையில் கொண்டு வந்து நிறுத்தி,

"இதோ கடவுள்"

"இதோ மதம்"

பாருங்கள் பகுத்தறிவாளர்களே! என்று அறிவியக்கப் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் ஆணித்திறமான ஆதாரங்களோடு கூறி வருகின்றனர். இந்த அசைக்கமுடியா ஆதாரங்களை மறுக்கமுடியாத 'மதிவாணர்கள்' அரசியல் என்னும் திரைமறைவில் நின்று கொண்டு, மக்களைத் தம்பக்கம் திருப்பிவிடலாம் என்று மனப்பால் குடிக்கிறார்கள். மதத்தைக் கைவிட்டால் மன்பதையில் உலவமுடியாது என்ற மந்தமதி படைத்த மதத் தலைவர்கள்தான் கடவுளைத் தங்கள் உள்ளங்கையில் வைத்துக் கொண்டு உலகை ஏமாற்றுகிறார்கள் என்றால், நாட்டுக்கு நல்லது செய்ய வல்லவர்களான அரசியல் வாதிகளுக்கு கடவுள் — மதம் ஆகிய முகமூடிகள் ஏன் தேவைப்படுகின்றன என்பதுதான் தெரியவில்லை. அதிலும் மதச்சார்பற்ற அரசியல் நடத்துவதாகக் கூறிக் கொள்ளும் ஒரு அரசாங்கத்தைச் சார்ந்தவர்கள், ஏன் — எங்கு பார்த்தாலும் — எப்பொழுது பார்த்தாலும் 'பஜகோவிந்தம்' பாடிக் கொண்டு திரியவேண்டும்! எங்கே கோயில் கட்டுகிறார்கள் — எங்கே குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) நிகழ்த்துகிறார்கள் என்று தேடித் தேடி மக்களின் வரிப்பணத்தை ஏன் கரியாக்கவேண்டும்! மதத்தின் பேரால் — புராணத்தின் பேரால் மாநாடு கூட்டினால், மந்திரிகள் மார்தட்டிக்கொண்டு 'நான் முந்தி' 'நீ முந்தி' என்று ஏன் விழுந்தடித்துக் கொண்டு ஓடவேண்டும்!

காஞ்சிபுரத்துக்கு அருகாமையிலுள்ள திருக்கழுக் குன்றத்திலே, மாணிக்கவாசகரால் பாடப் பெற்ற திருக்கழுக்குன்றப் பதிகத்தைக் கல்லிலே பதிய வைக்கும் விழாவை மந்திரி மாணிக்கவேலர் திறந்து வைத்தார் என்ற ஒரு செய்தி 31—3—53-ல் வெளிவந்திருக்கிறது.

தோழர் மாணிக்கவேலர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவைப் பெற்றுத் — திராவிட நாட்டைத் திராவிடர்க்காக்குவதற்காகப் பாடுபடுவேன் என்று கூறிச் சட்டசபை உறுப்பினரானவர் என்பதும், பின்னர், அமைச்சர்களைத் தேடி ஆச்சாரியாரால் வீசப்பட்ட வலையில் சிக்கி ஸ்ரீமாணிக்கவேலர் அவர்களாகி — அமைச்சரானவர் என்பது அனைவருக்கும் தெரியும். அப்படிப்பட்ட 'அறிவாற்றல்' பெற்ற அமைச்சர் என்ன கூறுகிறார் தெரியுமோ?

> "தற்காலத்தில் மக்களிடம் தெய்வ நம்பிக்கை குறைந்து வருவது தவறு — உண்மையான பக்தி இருந்தால் கடவுள் கருணை கிட்டுவது திண்ணம். இதற்கு மாணிக்கவாசகரே சான்று அதாவது அவருடைய பதிகத்தைத் தக்க இடத்தில் பதியவைத்தது போற்றக்கூடியது"

என்று பேசியிருக்கிறார். வைதிகர்களின் வட்டாரத்திலே ஒரு பழமொழி வழங்குவது உண்டு. அதாவது, "திருவாசகத்துக்கு உருகாதார், ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்று. அதாவது, மாணிக்கவாசகரால் பாடப்பெற்ற திருவாசகம் ஒன்றுதான் மக்கள் மனதில் மிகவும் எளிதாகப் பதியக் கூடிய அளவுக்கு இனிமையும் நயமும் (கருத்தல்ல) அமையப்பெற்றதென்பது சைவ மெய்யன்பர்களின் 'பொய்யா மொழி'யாகும்,

அப்படிப்பட்ட திருவாசகம் — பாடிய அளவிலேயே — பாடக்கேட்ட அளவிலேயே அனைவரையும் உருகச் செய்யும் திருவாசகம் இன்று என்ன நிலையை அடைந்திருக்கிறது, பாருங்கள்! மக்கள் மனதை உருக்கிக் கரையவைக்கவல்ல திருவாசகம், இன்று மக்கள் மனதில் பதியவே மறுக்கின்றது! எனவேதான் அதனைக் கல்லிலே பதியவைக்கிறார்கள்! 'புல்லாய் — பூண்டாய் — கல்லாய் — மனிதராய்' என்று அன்று பாடிய மாணிக்கவாசகரின் பதிகம் இன்று மக்கள் மனதிலே பதிய மறுக்கின்றது — கல்லைக் குடைந்து அதில் பதியவைக்கிறார்கள் — பாராளுமன்றத் தலைவரின் (அமைச்சரின்) துணை அதற்குத் தேவைப்படுகிறது. மக்கள் மனதிலே பதிந்திருக்கவேண்டிய திருவாசகம், கல்லிலே பதிய வைக்கப்படுகிறது. அதிலும் மக்கள் மனதில் பதிய மறுக்கும், அதாவது ஒரு காலத்தில் மக்களால் விரும்பப்பட்ட மாணிக்கவேலர், இன்று மக்களால் வெறுக்கப்படும் நிலையில் இருந்துகொண்டு,

> ஐயகோ, திருவாசகமே! நின் நிலையும் என் நிலையாகிவிட்டதே! என்னையும் மக்கள் தங்கள் மனதில் பதியவைக்க மறுக்கிறார்கள் — உன்னையும் மக்கள் தங்கள் மனதில் பதியவைக்க மறுக்கிறார்கள் — எனவே, உன்னைக் கல்லிலாவது பதியவைக்கலாம் என்று கருதியவர்கள், உன் நிலையை அடைந்த என்னை அழைத்து, 'மக்களால் விரும்பப்படாத மந்திரியே! இதோ உம்மைப்போல் மக்களால் விரும்பப்படாத திருவாசகம் — இதனைக் கல்லிலே பதியவைக்கும் விழாவைத் திறந்துவைத்தருளும்' என்று கட்டளையிட்டுவிட்டார்கள்

என்று கூறுவதுபோல் இருக்கிறது, மந்திரி மாணிக்கவேலரின் திறப்பு விழாப்பேச்சு.

நரி பரியாச்சு! பரி நரியாச்சு! வைகைகரை புரண்டோடிற்று! கடவுளே கூலியாளாகக் கரையடைக்க வந்தார்! பிட்டுக்கு மண் சுமந்தார்! பிரம்படிபட்டார்! இவ்வளவும்யாருக்காக? அந்த மாணிக்கவாசகருக்காக! அந்த அளவுக்கு அருள் விளக்காக இருந்த மாணிக்கச் சுடரின் பதிகங்களை மக்கள் தங்கள் மனதில் பதிய வைக்கமறுக்கின்றனர் — எனவே கல்லில் பதியவைக்கின்றனர் - அன்றொரு நாள் மந்திரியாக இருந்து மக்களின் பணத்தை மகேசுவரன் கோயில் கட்டுவதில் பாழாக்கிய மாணிக்கவாசகரின் பதிகங்களை, இன்று, மக்களின் வாக்குரிமைகளை ஆச்சாரியாரை அமைச்சராக்கித்தானும் ஒரு அமைச்சராவதில் பாழாக்கிய சுயநலமே உருவெடுத்த மாணிக்கவேலர் கல்லில் பதிய வைத்தது கன பொருத்தமென்றே கூறலாம்!!

*

புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக்கொண்டதாம். புலிக்கிருக்கும் அந்தக் கோடுகள் இயற்கையாகவே அதற்கு அமைந்தவை என்பதை அறியாத — அறியமுடியாத பூனை, தானும் புலியாக ஆகிவிடலாம் என்ற ஆசையால் உந்தப்பட்டு, புலிக்கிருக்கும் அந்தக் கரிய கோடுகள் தனக்கும் இருந்தால் தானே தன்னையும் புலியென மற்றையோர் எண்ணுவர் என நினைத்துச் சூடு போட்டுக்கொண்டதாம்.

உழவுத் தொழிலாளர்கள், ஆலைத் தொழிலாளர்கள், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், இரயில்வேத் தொழிலாளர்கள் என்று இப்படிப் பல்வேறு துறைப்பட்ட தொழிலாளர்கள், தங்களுக்கு ஏற்பட்ட குறைகளைப் போக்கிக் கொள்வதற்கு வழி காணுவதற்காக நாட்டிலே மாநாடுகள் நடத்துவர் — முடிந்தவரை குறைகளும் களையப்படுவர். மனிதத் தன்மைக்குக் கட்டுப்பட்ட குறைகள் மக்களால் நடத்தப்படும் மாநாடுகளின் நடவடிக்கைகளின் வாயிலாக களையப்படுவது இயற்கை. ஆனால், மனிதத் தன்மைக்குக் கட்டுப்படாததும், கடவுள் தன்மை வாய்ந்ததுமான தேவாரம், திருவாசகம், திருப்பாவை ஆகிய அருள்மறைகளும் மாநாடுகள் நடத்துகின்றனவே! ஏன் இது?

ஆண்டவனால் அடியெடுத்துக் கொடுக்கப்பெற்று, அடியவர்களால் பாடப் பெற்று, அன்பர் குழாங்களால் பாராயணம் செய்யப்படும் திருப்பாவை, திருவெம்பாவைகளுக்கு என்ன குறை ஏற்பட்டது?

புயல் நிவாரண நிதி

ரூ. 27064—6—2

[இதுவரை]

முன் கணக்குப்படி	26432—13—8
சங்கரன் பண்டிதர், சிலோன்	50—0—0
எஸ். பொன்னுசாமி, சிலோன்	19—0—0
சென்னை 37-வது வட்டம் புதுப்பேட்டை தி. மு. க.	15—2—6
இராமநாதபுரம் மாவட்ட தி. மு. க.	100—0—0
யாழ்ப்பாணம் தி. மு. க. கிளை செயலாளர் இராமசாமி மூலம் (மெர்க்கண்டைல் பேங்க் எக்ஸ்சேஞ் மூலம்)	300—0—0
மதுரை தசரததாசன்	4—0—0
டெல்லி இராணுவத் தோழர்கள் வேலுசாமி மூலம்	37—6—0
சண்முகசுந்தரம் தி. மு. க. கருங்குளம்	1—0—0
சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் ராமராசன் மூலம்	80—0—0
அடையார் கங்கா சோப்பு தொழிற்சாலை தொழிலாளிகள், கிளார்க்குகள், மற்றும் திருவான்மியூர் தோழர்கள் ராமலிங்கம் மூலம்	25—0—0
	27064—6—2

மு. கருணாநிதி
புயல் நிதிக்குழு செயலாளர்
தி. மு. க.

யாரால் ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது? எதற்காக ஏற்பட்டது? என்பனபோன்ற கேள்விகளை, அத்தகைய மாநாடுகளை நடத்துபவர்கள், எழுப்பி, அவற்றிற்குத் தக்க விடைகள் காணுவது மிக மிக அவசியமன்றோ! வறிதே மாநாடுகள் நடாத்தி, மகேசுவரனின் மாண்புக்கு 'மாசு' தேடுவது பெரும் இழுக்கன்றோ!!

திருக்கழுக்குன்றத்திலே, திருவாசகம், கல்லில் பதியவைக்கப்படுகிறது! மாயூரத்திலே, திருவெம்பாவை, மக்கள் மனதில் பதிய வைக்க மாநாடு நடத்தப்படுகிறது. இரண்டு நிகழ்ச்சிகளும் ஒரேநாளில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாக நடைபெற்றுள்ளன. கழுக்குன்றத்தில் கல்லில் பதிய வைக்கிறார்கள் — மாயவரத்தில் மனதில் பதிய வைக்கிறார்கள். கழுக்குன்றத்துத் திருவாசகமும், மாயூரத் திருவெம்பாவையும் ஒருவரால் பாடப்பெற்றவைதாம். இருந்தும் ஒன்றுக்குக் கல்லில் பதிய வைக்கும் முயற்சியும் இன்னொன்றுக்கு மக்கள் மனதில் பதியவைக்கும் முயற்சியும் நடைபெறுகிறது. கடவுளின் திருவருளால் பாடப்பெற்றதாகச் சொல்லப்படும் திருவாசகம் முதலான பாடல்கள் இன்று மக்களால் மறக்கப்படும் நிலையை அடைந்து விட்டன என்பதற்கு மாயூரத்து மாநாடும், திருக்கழுக்குன்றத்து ஏற்பாடும் சிறந்த எடுத்துக்காட்டுகளாக உள்ளன. கழுக்குன்றத்தில் கல்லில்பதிய வைக்கிறார்கள்—மாயூரத்தில் மனதில் பதியவைக்கப்பார்க்கிறார்கள். இந்த இரண்டு முயற்சிகளையும் செய்பவர்களில் ஒருவரைத்தான் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்திவிட்டேனே! இன்னொருவர் யார்என்று கேட்கிறீர்களா? அவரும் அவருக்கு அண்ணன்தான்! அப்படியென்றால்! ......மாணிக்கவேலரைப்போலவே, மக்களின் மனதைவிட்டு விலகி நிற்பவர்தான். மாணிக்கவேலர் அண்மையில்கூடி அண்மையிலேயேபிரிந்தவர் — அவரோ பல ஆண்டுகட்கு முன்னால் கூடிப் பல ஆண்டுகட்கு முன்னாலேயே மக்கள் மனதை விட்டுப்பிரிந்து நிற்பவர். இருவரும் நிலையில் ஒன்றுதான் என்ற போதிலும், மாணிக்கவேலரோடு ஆர்க்காட்டாரை ஒப்பிடுவது சரியல்ல—முறையல்லவென்று சிலர் கருதலாம்—ஆம் உண்மைதான்! நானும் அப்படித்தான் கருதுகிறேன். நேற்று வந்து மக்கள் மனதில் இடம் பெற்று — மறக்கப்பட்ட மாணிக்கவேலரோடு, பழைய பெரிய மனிதரான சர். ஏ. இராமசாமி அவர்களை ஒப்பிடலாமா என்றுதான் கேட்கத்தோன்றும் எவருக்கும்.

ஆனால், ஒரு காலத்தில் சான்பிரான்ஸிஸ்கோவரை அவருடைய அறிவு சென்று அவருடைய ஆழ்ந்த கருத்துக்களடங்கிய அரசியல் சொற்பொழிவு அங்குகுழுமியிருந்த அனைவரையும் ஆனந்தக்கடலில் ஆழ்த்திற்று என்பதைப் படித்து அவரைப் பாராட்டி மகிழ்ந்த நாம், —நாளைக்கு ஜெனீவா போகிறார்; அங்கும் அவருடைய தோலா நாவின் சொல்வன்மை கண்டு களிப்படைய இருக்கும் நாம் — இன்று கேவலம் ஒரு திருவெம்பாவை மாநாட்டுக்குத் தலைமை வகிக்குமளவுக்குக் கீழே இறங்கி வந்திருப்பதையோ — இறக்கிவைக்கப்பட்டிருப்பதையோ காணும் போதுதான் மாணிக்கவேலர்களும் ஆர்க்காட்டார்களும் ஒன்றாகத் தெரிகின்றனர்.

எவ்வளவு படிப்பும் திறமையும் இருந்தபோதிலும், பகுத்தறிவென்னும் பண்பைப் பெறாதவர்களை மதம் என்ன பாடுபடுத்திவிடுகிறது என்பதற்கு சர். ஏ. இராமசாமி ஒரு எடுத்துக்காட்டாக நிற்கிறார்;

கடவுள் என்றால் எது? மதம் என்றால் எப்படிப்பட்டது? இவ்விரண்டும் எதற்காக நாட்டில் ஏற்படுத்தப்பட்டன என்பதை அறிய 'சர்' பட்டமோ, டாக்டர்பட்டமோ உதவாது. பகுத்தறிவு ஒன்றுதான் அதனை அறிவிக்கும் அரிய கருவி. அதனை ஆர்க்காட்டார் போன்ற பேரறிஞர்கள் பெற்றிருந்தால், இன்று தமிழர்களாகிய நாம், இந்த இரங்கத்தக்க நிலையில் இருக்கவே மாட்டோம். பாகிஸ்தானுக்கு ஒரு ஜின்னா என்றால், திராவிடநாட்டுக்கு ஒரு இராமசாமி என்ற நிலையன்றோ உண்டாகியிருக்கும். போனது போகட்டும். இனிமேலாவது—அரசியல் குட்டுகள் பலவாங்கிய பின்னராவது—தம் இனத்தவரின்முன்னேற்றத்திற்காகப்பாடுபடமாட்டார்களா என்று எதிர்பார்க்கும் நேரத்தில், செத்த பிணத்தருகே இனிச் சாகும் பிணங்கள் நின்று கத்துவதுபோல், விஞ்ஞானத்தின் முன்னேற்றம், மதத்துக்கும் கடவுளுக்கும் குழிதோண்டிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், அவைகளைப் பாதுகாத்து இன்னும் சிறிது காலத்துக்காவது வாழ வழிவகை செய்யும் முறையில், மாநாடுகள் நடத்தி, மகேசுவரனையும் மதத்தையும் காப்பாற்ற முயல்பவர்கள் பின்னால் அறிவாற்றல் பெற்ற ஆர்க்காட்டார் செல்வது எத்துணை அறியாமையின் பாற்பட்டதாய் இருக்கிறது பாருங்கள்.

நமது மதிப்பிற்குரிய ஆற்காட்டார் கூறுகிறார்,

"இணையற்ற சைவ, வைணவ இலக்கியப் புதையல்களை மேல் நாட்டு மொழிகளில் மொழிபெயர்த்து, அவற்றின் உண்மைகளை மேற்கத்திய மக்களும் உணரும்படி செய்யவேண்டும்"

என்பதாக. தப்பித் தவறி ஒருவேளை எவரேனும் இக்காரியத்தைத் துணிந்து செய்துவிட்டால் "ஸ்ரீமான் இராமசாமி முதலியார் அவர்கள் சொல்லிவிட்டார்கள்—செய்யத்தான் வேண்டும்" என்ற ஏமாளித்தனத்தில் எவரேனும் செய்துவிட்டால், இங்குள்ள சைவ வைணவப் பெருமக்களைப் பற்றி மேற்கத்திய மக்கள் என்ன எண்ணுவார்கள்? சைவ வைணவப் புதையல்களை மேலை நாட்டு மொழிகளில் பதியவைத்துப் பார்த்தால், என்னென்ன விநோதங்கள் தெரியும்? எண்ண முடியாது—எழுத்தில் அடங்காது—ஏட்டில் பிடிக்காது. அந்த அளவு ஆபாசக் குப்பைகளைத் தானே சைவ வைணவ இலக்கியப் புதையல்கள் அடக்கிவைத்துள்ளன!

சைவ, வைணவப் புதையல்களின் எடுத்துக்காட்டாக ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன். சைவக் கடவுளான சிவன், ஒருநாள் தம்முடைய பக்தன் ஒருவனுடைய வீட்டுக்குச் சென்று, 'உன்னிடமுள்ள ஒன்றை விரும்பி வந்தேன் என்றார். என்ன என்று கேட்டான் பக்தன். உன்னுடைய மனைவியை விரும்பி வந்தேன் என்றார் சிவன்—பக்தன் அகமிக மகிழ்ந்து தன்மனைவியைச் சிவன் பின்னால் அனுப்பினான்.

இது சைவப் புதயல்களில் ஒன்று. இதுபோன்ற 'அற்புதமான' ஆயிரக் கணக்கான புதையல்களின் இருப்பிடம் சைவம், வைணவம் என்னும் இரு கடவுள் விடுதிகள்.

இந்த இரு விடுதிகளிலும் தங்கி இருப்பவர்கள் யார் யார்! எப்படிப்பட்டவர்கள்! என்பதை மேலை நாட்டினர்க்கு அறிமுகப்படுத்திவைக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார் ஆர்க்காட்டார்.

"அகல் விளக்கும் கட்டை வண்டியுமன்றி வேறொன்று மறியேன் பராபரமே"

என்றிருந்த மக்களுக்கு வானவூர்தியையும் மின்சாரவிளக்கையும், இவைபோன்ற இன்னும் பலப்பல வியத்தகு பொருள்களையும் நமக்களித்த மேலை நாட்டினருக்கு செய்ந்நன்றி கொல்லாத முறையில் சைவவைணவப் புதையல்களையாவது அன்பளிப்பாக வழங்க வேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்த பல்கலைக் கழகத் துணை வேந்தரைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை!

தமிழ் மொழியில், கடவுள்—மதக் கலப்படமற்ற புதையல்கள் சில உண்டு. அவை மக்களின் அறிவை மேலும் வளரச்செய்பவல்லவை. அவற்றுள் தொன்மையில் முதன்மையானது ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியமாகும். இதனை மேலைநாட்டினரின் பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்த்து அவர்கள் அதனைப் படிக்கும் பேற்றை உண்டாக்கினால் அது நமக்குச் சிறப்பையும் புகழையும் தராதென்று கருதுகிறாரா ஆர்க்கட்டார்! தமிழ் மக்கட்கு முதன்மையானதும் மிகப் பழைமையானதுமான நூல் தொல்காப்பியம் ஒன்றே. தமிழ்மக்களின் நாகரிகத்துக்கும் கலாச்சாரத்துக்கும் எடுத்துக்காட்டாக இருப்பதும் இந்த நூல்தான். பண்டைக் காலத் தமிழ் மக்கள் கடவுள் வழிபாட்டில் தங்கள் காலத்தைப் பாழாக்கவில்லை என்பதை வலியுறுத்துவதும் இத்தொல்காப்பியம் ஒன்றுதான். மற்றை நூல்களில் காணப்படுகின்ற கடவுள் வாழ்த்து இத் தொல்காப்பியத்தில் கிடையாது. அதாவது, ஒரு நூலாசிரியன், தன்னுடைய நூலைத் தொடங்குமுன்னர், அது செவ்வனே முற்றுப் பெறுவதற்காகத், தனது வழிபாட்டிற்குரிய கடவுளையோ அன்றித் தான் எடுத்துக் கொண்ட பொருளுக்கு ஏற்ப உள்ள ஒரு கடவுளையோ வழிபடும் அறிகுறியாக—அக் கடவுள் வணக்கமாக ஒரு பாடலாவது பாடிய பின்னரே தான், அவன் தன்னுடைய நூலை தொடங்குதல் மரபு என்பதாகச் சொல்லப்படும் வழக்கினைத் தொல்காப்பியர் கையாளவே இல்லை. இதற்குக் காரணம் என்ன? அன்றைய தொல்காப்பியர் காலத்தில், இன்றைய தொல்காப்பியர்கள் — நமது மதிப்பிற்குரிய ஆர்க்காட்டார் போன்றவர்கள், கடவுள் என்ற சொல்லுக்குக் கற்பிக்கும் பொருளை அடிப்படையாகக் கொண்ட யாதாயினும் ஒன்று இருந்திருக்குமானால், அதிலும் அத்தகைய கடவுளுக்கு வணக்கம் செலுத்திய பின்னர்தான் எந்தக் காரியத்தையும் தொடங்குதல் முறை என்ற வழக்கு உண்மையாகுமானால், தொல்காப்பியரும் அதனைச்செய்தே இருப்பார். ஆனால், அவர் அதனைச் செய்யவில்லை. ஏன் செய்யவில்லை? அப்படியொன்று இல்லாததால் என்பது சொல்லாமலே விளங்குவதால் என்க. இல்லாத ஒன்றை— இருக்க வேண்டிய இன்றியமையாமை இல்லாத ஒன்றை — தம்முடைய தூய்மையான நூலின் தொடக்கத்திலேயே இருப்பதாகக் கூறுவது அடுக்காது என்பது மட்டுமல்ல — அறியாமையின் மிகுதியை அளந்து காட்டுவதுமாகும் என்று கருதியதாலேயே தொல்காப்பியர் அதனைச் செய்யவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

இந்த நிலையில், கடவுளையும் மதத்தையும் காப்பாற்றுவதையே தங்கள் கடமையாகக்கொண்டுள்ள சர். ஏ. ஆர். போன்றார் சைவ வைணவப் புதையல்களை மேலைநாட்டினர்க்கு அறிமுகப்படுத்திவைக்கும் முயற்சியில் ஈடுபடு முன்னர் சிறிது காலத்துக்குப் பகுத்தறிவுப் பூங்காவில் உலவி, அதன் நறுமணத்தை நுகரவேண்டுமென்று விரும்புகிறோம் — நாம் அவரிடம் கொண்டுள்ள நல்லெண்ணத்தாலும் அன்பாலும்.

நாம் எவ்வளவு அன்பு காட்டி அவரை நமது பாசறைக்கு அழைத்தாலும், அவர் வரமாட்டார் என்பது அவருடைய சொற்பொழிவினின்றும் அறியக்கிடக்கிறது என்ற போதிலும் அன்பழைப்பு அவருக்கும், அவர் போன்றார்க்கும்.

மாயூரத்தில் நடைபெற்ற திருப்பாவை, திருவெம்பாவை மாநாட்டுக்குத் தலைமைவகித்த ஆர்க்காட்டு இராமசாமி அவர்கள்,

"கடவுள் நம்பிக்கையையும் மத நம்பிக்கையையும் உதறித்தள்ளியவர்கள், உடல் நலத்திலோ, மனோநிலையிலோ பிறமக்களைப் பார்க்கிலும் சிறந்தவர்களாகக் காணப்படவில்லை—மோசமாகக் காணப்படுகிறார்கள்"

என்று தமது சொற்பொழிவில் குறிப்பிட்டுப் பேசியுள்ளார். கடவுள் நம்பிக்கையும், மத நம்பிக்கையும் அற்றவர்கள், உடல்நலத்திலும் மனநிலையிலும் குன்றியிருப்பதாகக் கண்டுபிடித்துக் கூறியதற்கு அவருக்கு நன்றி செலுத்துகிறோம். ஆனால், அப்படிப்பட்டவர்களின் பட்டியலைத் தர அவர் மறந்துவிட்டார். ஏன் மறந்தார்? காரணம் தெரியவில்லை. பட்டியல் இருந்தால் கட்டாயம் கூறியிருப்பார். ஆனால், கடவுள் நம்பிக்கையும், மதப் பற்றுதலும் கொண்டிருந்த பலர், உடல் நலத்திலும் மன நிலையிலும் பெரிதும் குன்றிக் குற்றுயிராக மாண்டனர் என்பதற்கு நம்மிடம் பட்டியல் ஏராளமாக உண்டு — விரும்பினால் தாராளமாக வெளியிடுகிறோம். இதோ எடுத்துக்காட்டுக்கு ஒன்று! பகவான் என்றும், மகரிஷி என்றும் அழைக்கப்பட்ட இரமணர். அவர் கடவுள் நம்பிக்கை அற்றவரா? மதத்தை வெறுப்பவரா? ஏன் புற்றுநோய் ஏற்பட்டுக் குற்றுயிராக மாண்டார்? கடவுள் நம்பிக்கை அற்றவர்களுக்குத்தான் உடல்நலம் குன்றுமாமே! கூறுகிறார்! ஆர்க்காட்டார்! குறைமதி படைத்தவரா! அல்ல! அல்ல!! ஆண்டவனை அணுகும்போது அறிவு அகன்று விடுகிறது அவர்களுக்கு! அதனால்தான் அவ்விதம் கூறுகிறார்கள். இது குறித்து மேற்கொண்டு விபரமும் விளக்கமும் தேவைப்பட்டால், அவ்வப்போது பட்டியல் வளர்ந்துகொண்டே போகும். அச்சமின்றிக் கேளுங்கள். தயவு தாட்சண்ணியமின்றி விளக்கம் தருகிறோம். ✲

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/638

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துக்ளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு 'Special' ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.

பிராஞ்ச்: 134, SERANGOON ROAD. சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES, 82, MAIN ST., கொழும்பு-11.

சூழ்ச்சி பலித்தது!

[கமலநாதன்]

ஏழுமலை—என் நண்பன்—சிரித்தபடியே என் அறையினுள் நுழைந்தான்.

வாப்பா, ஏழுமலை; ஏது இவ்வளவு தூரம் வந்துவிட்டாய் என விசாரித்தபடி உட்காரச் சொன்னேன்.

மஞ்சள் பத்திரிகை ஒன்றை நீட்டி, மறக்காமல் என் திருமணத்துக்குக் கட்டாயம் வரவேண்டும் என்று விண்ணப்பித்துக்கொண்டான்—என்னிடம்.

பத்திரிகையைப் பிரித்துப் படித்தேன்—சந்தேகம் என்னுள் எழுந்தது. ஏனெனில் ஏழுமலை தன் மாமன் மகள், மரகதத்தைக் கட்டிக்கொள்ளப் போவதாகவும், அதையேதான் தன் அம்மாவும் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்றும் கூறியிருந்தான். ஆனால் பத்திரிகையில் காட்டூர் கிராமம் கந்தசாமி முதலியாரின் மகள் சரோஜா எனப் போடப்பட்டிருந்தது.

என்னப்பா, ஏழுமலை! உன்மாமன் மகள் மரகதத்தையல்லவா, அம்மா உனக்குத் திருமணம் செய்துவைக்கப்போவதாகச் சொல்லி இருந்தாய். பத்திரிகையில் பார்த்தால் சரோஜா என்று இருக்கிறதே! ஏன்! மரகதம் என்ன ஆனாள்? எனக் கேட்டேன்.

அம்மாவுக்கும் மாமிக்கும் ஏதோ மனஸ்தாபம் ஏற்பட்டுவிட்டதுபோலிருக்கிறது. எனவேதான், எதிர்பாராதவிதமாய் உடனே இந்தத் திருமணத்தை ஏற்பாடு செய்திருக்கிறார்கள் எனக் கூறிவிட்டு, யார் யாருக்கு எங்கெங்கே ஆண்டவன் முடிச்சு போட்டு வைத்திருக்கிறானோ அங்கங்கேதானப்பா நடக்கும்? எனப் பத்தாம் பசலிப் பாடத்தை என்னிடம் ஒப்பிவித்துவிட்டு, விடைப் பெற்றுக்கொண்டு சென்றுவிட்டான்.

இந்த இருபதாம் நூற்றாண்டிலேயும் இப்படிப் பழமைப்பித்தில் பற்றுக்கொண்ட வாலிபர்கள் இருக்கிறார்களே—இந்த நாடு என்றுதான் உருப்படுமோ என எண்ணி ஏங்கினேன்.

படித்தவர்கள் என்று தங்களைக் கூறிக்கொண்டு, பட்டங்கள் பல பெற்றவர்களே பத்தாம் பசலித்தனத்திலே பித்துகொண்டு பழமைக்குச் சாமரம் வீசி பணிந்து தொழும் பொழுது, ஏழுமலையைப் போன்ற ஏதுமறியாதவர்கள் இருப்பதிலே ஆச்சர்யம் என்ன இருக்கிறது!

பத்திரிகையில் கண்ட வெள்ளிக்கிழமையன்று ஏழுமலையின் திருமணத்திற்கு நான்சென்றிருந்தேன். ஏழுமலை, தன் தாய்க்கு ஒரே மகனானதால், ஏகதடபுடலாக, பாண்டு வாத்தியம் முழங்க கலியாண ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஏழுமலை, மணக்கோலத்திலே மணப்பந்தலின்கண் எழுந்தருளியிருந்தான்.

மணப்பெண்ணைக் காணோம். "ஊம், சீக்கிரம், கலியாண பெண்ணை அழைச்சிண்டு வாங்கோ". என்று அய்யர் உரத்த குரலில் கூவினார்.

நேரம் கடந்ததே ஒழிய, மணப்பெண் வந்தபாடில்லை. மணப்பெண் இருந்த அறையிலே பெண்கள் கூட்டம் நிரம்பிவிட்டது.

"ஆரம்பத்திலேயே அபசகுனமா இது"—மணப் பெண்ணின் அறையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த ஒரு அம்மையாரின் அர்ச்சனை இது.

ஆடவர்கள் ஒருவரின் முகத்தை ஒருவர் கேள்விக் குறியோடு பார்த்துக் கொண்டனர்.

"உடம்பெல்லாம் எரிச்சலாம்; ஒரே துடியாய்த்துடித்துக்கொண்டிருக்கிறாள்; பாவம்"—மற்றொரு அம்மையார் எங்கள் கேள்விக் குறிக்கு பதிலளிக்கும் வகையில், தனக்குத்தானே கூறிக்கொண்டு சென்றார்கள்.

"நாள் செய்வதை நல்லோர் செய்யமாட்டார்கள். என்று நம்ம பெரியவர்கள் கூறியிருப்பது பொய்க்குமோ. நல்ல நாளாகப் பார்த்து நல்ல காரியத்தைச் செய்ய வேண்டும் எந்தச் சோணங்கி அய்யர் நாள் பார்த்து வைத்தானோ, நம்ம சோமசுந்தரம் குருக்கள் நாள் வைத்துத் தந்தால், இம்மியளவு பிசகுநேராது, என்று தனது 'பரந்த அனுபவத்தை'க் கூறினார், என் பக்கத்திலிருந்த ஒரு பெரியவர்.

"பொருத்தம் சரியாகப் பார்த்திருக்கமாட்டார்கள்" மற்றொருவர் முன்னவருக்குப் பக்கமேளம் தட்டினார்.

மணவிழாவுக்கு வந்திருந்தோர் அனைவரும் தங்கள் மனதில் பட்ட கருத்துக்களைக் கூறிக்கொண்டனர்.

அய்யர் அன்று வீணே திரும்ப நேரிட்டது. அவர்என்ன செய்வார்? அவருடைய அன்றைய 'ராசி பலன்' அப்படியிருக்கிறதே!—அவருடைய அகராதிப்படி!!

நாட்கள் சில சென்றன. மேலும் பல ருசிகரமான செய்திகள் நான் அந்த திருமணத்தைப்பற்றிக் கேள்விப்பட்டேன். மரகதத்தின் தகப்பனாரும், ஏழுமலைக்கு முதலில் பெண் கொடுக்க இருந்த மாமனுமான முருகேச முதலியார், தன் பெண்ணைக் கட்டிக்கொள்ளாததால், கடுங்கோபங்கொண்டு, யாரோ ஒரு மந்திரவாதியின் துணையால், சரோஜா என்னும் புது மணப் பெண்ணுக்கு சூன்யம் செய்துவிட்டதாகச் சிலர் கூறிக்கொண்டனர். மற்றும் சிலர், ஏவல்வைத்துவிட்டதாகக் கூறினர். சிலர், அந்தப் பெண்ணைப் பிசாசு தான் பிடித்துக்கொண்டிருக்கிறது—என்ற தங்கள் வாக்கை நிலைநிறுத்தப் பாடுபட்டனர்.

இந்த அதிசயமான தகவலைக் கேட்டு நான் ஆச்சரியப்பட்டேன். விஞ்ஞானம் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் இந்த நாளிலே, இப்படி அஞ்ஞான இருளிலே மூழ்கி அவதிப்படுகின்றனரே மக்கள் என்று ஆயாசப்படுவதைத் தவிர வேறென் செய்வது. இவைகள் கட்டுக்கதைகள் விட்டுத் தள்ளுங்கள் எனக் கூறப்போனால், முட்டித்தள்ளும் மாட்டைவிட வேகமாக என்னை கெட்டித் தள்ளுவார்களே.

மாதங்கள் இரண்டு கழிந்தது—மணச்செய்தியின் வதந்தியும் ஒருவாறு மறைந்தது.

*

உடல்நலக் குறைவால், தன் தாய்வீடு சென்றிருந்த என் துணைவியை அழைத்துவர நான் கிராமத்திற்குச் சென்றிருந்தேன்.

நகரத்தில் நடமாடிக்கொண்டிருந்த எனக்கு கிராமத்தில் பொழுதைக் கழிப்பது எப்படி என்று புரியாமல், அடுத்த கிராமத்திலிருந்த என் பள்ளித் தோழன் நாராயணசாமியைக் காணுவதின் மூலமாக வாவது பொழுதைப் போக்கலாம் என எண்ணி, அங்கு சென்றேன்.

என் திடீர்ப்பிரவேசத்தைக்கண்ட நண்பன், அகமெலாம்மகிழ என்னை வரவேற்றான். என் நலம், குடும்ப நலம் ஆகியவற்றை விசாரித்தான்.

நானும் அவனை பலப்பல விசாரித்துவிட்டு, ஏன் இன்னும் பிரமசாரியாகவே காலங் கழிக்கிறாய்; கல்யாணம் எப்பொழுது? என்ற கேள்வியைப் போட்டேன்.

இதற்கிடையில், இரண்டு டம்ளர்களில் காப்பியை வைத்துவிட்டு ஒரு இளநங்கை, நாராயணசாமியிடம் தன்நயனப்பார்வையால்பேசிவிட்டு நகர்ந்தாள்.

நண்பன் என்னைக்கண்டு நகைத்துவிட்டு, இவள் யார் தெரியுமா? என ஒரு கேள்வியைப் போட்டான்.

எனக்கெப்படியப்பா தெரியும். நீ நம்பும் ஜோசியனால்கூட முன்பின் அறியாதவர்களைப்பற்றிக் கூறமுடியாதே என்றேன்.

நான் உனக்கு ஒரு ருசிகரமான சம்பவம் குறித்து கூறப்போகிறேன்—என ஆரம்பித்தான்.

பசியோடிருந்தவனுக்குப் பஞ்சாமிர்தம் கிடைத்தால் பரவசம் அடைவதைப் போல, பொழுதை எப்படிப் போக்குவது என திகைத்திருந்த எனக்கு 'ருசிகரமான சம்பவம்' கிடைக்கிறதே என ஆனந்தப்பட்டேன்.

*

இவள் என் அத்தை மகள். பெயர் சரோஜா என்றான்.

"யார் சரோஜாவா?" என கேள்விக் குறியோடு ஆச்சரியக் குரலில் கேட்டேன்.

ஆம்! சரோஜாதான்!—நீ சந்தேகத்தோடு கேட்கிறாயே, அதே சரோஜாதான்—ஏழுமலைக்குத் துணைவியாக ஆக்கப்பட இருந்த சரோஜாதான்—பேய் பிடித்தவள் எனப் பேசப் பட்டாளே அதே, சரோஜாதான்! கேள், அந்தக் கதையை எனத் தொடர்ந்தான்.

பள்ளிப் படிப்பை முடித்த நான், தாயையும் இழந்த காரணத்தால்—அத்தையின் அன்பழைப்பின்பேரில் நிலங்களைக் கவனித்துக் கொள்ள இங்கு வந்து சேர்ந்தேன்—அப்பொழுது சரோஜா பத்து வயதுச் சிறுமி. நான் மாமன் மகன்—அவளுக்கு. அவள் அத்தை மகள்—எனக்கு.

பக்குவம் அடைந்தாள்—அவள். பருவ வயதினன்—நான். இரும்பின் அருகே காந்தம்! விவரித்துக் கூற வேண்டியதில்லை. உபமானமும் தேவையில்லை. ஒத்த மனத்தினரானோம். இப்படிப்பட்ட நேரத்தில் தான் எங்கள் இன்பப் பாதையில் இடர் வந்து சேர்ந்தது.

திருச்சியிலிருந்து அத்தையின் தூர உறவினர் யாரோ வந்தனர்; பெண் கேட்டனர்; அத்தை சம்மதம் தந்துவிட்டாள்.

நாங்கள் கலங்கினோம்; திகைத்தோம். ஓடிவிட எண்ணினாலோ குடும்பத்துக்குக் கெட்ட பெயர். சாவைத் தேடிக்கொள்ளலாமென்றாலோ மனம் துணியவில்லை.

அத்தை, எனக்கேன் தன் பெண்ணைத் தரவில்லை என்ற சந்தேகம் உனக்கு எழும். நான் தந்தையற்றவன்; சொத்தற்றவன்—ஆகவே, அத்தை எனக்கு சரோஜாவைத் தர முன்வரவில்லை.

திருமண நாளோ நெருங்கிக் கொண்டிருந்தது. எங்கள் இக்கட்டைத் தீர்க்க எந்த மார்க்கமும் தென்படவில்லை. அந்த நேரத்தில் தான், எங்கள் ஊருக்கு ஒரு பேயோட்டி வந்திருந்தான்.

மூளை வேலை செய்தது. திட்டம் தீட்டினேன். சூழ்ச்சித் திட்டந்தான்.—மற்றவரை மாய்க்க அல்ல—எங்கள் வாழ்வில் இன்பம் காண!

மற்றவர் சந்தேகப்படாத வகையில்—சற்றும் ஆயாசப்படாது—நாடகத்தை நடத்திக்காட்ட வேண்டுமென சரோஜாவை நான் கேட்டுக்கொண்டேன். அவள்தான் எனக்காக உயிரையும்விடத் தயாராக இருந்தாளே! ஆயாசப்படாது நாடகம் நடத்திக் காட்டவா ஒப்பமாட்டாள்.

அந்த நாடகத்தைப் பற்றி நீ நேரில் கண்டிராவிட்டாலும் அது குறித்து கேள்விப்பட்டிருப்பாய் என எண்ணுகிறேன்.

பேய், பில்லி, சூன்யம் இல்லை என்று கூறுவாயே—பார்த்தாயா பேயின் சேஷ்டையை—அதுசெய்த உபகாரத்தை—அதனால் அடைந்த பலனை.

இப்படியெல்லாம் நடைபெறுவதற்கு உதவியாக இருக்கட்டும் என்றுதான் அந்தக் காலத்தில்பேய் உண்டு, சூன்யம் உண்டு என்று சொல்லி வைத்திருக்கிறார்கள் என எண்ணுகிறேன்.

இபபடி அவன் கூறிவிட்டு என்னைப் பார்த்து ஒரு வெற்றிப் புன்னகை புரிந்துவிட்டு மேலும் தொடர்ந்தான்.

இங்கு வந்தபிறகும் அந்த நாடகத்தை ஓரளவு நடத்திவரச் சொன்னேன்—ஏனெனில் திரும்பவும் காஞ்சியிலிருந்து வந்துவிட்டால், என்ற பயம்.

இந்தப் பேயின் சேஷ்டையைக் கவனித்த அத்தை—எனக்கே!—சொத்தற்ற எனக்கே—தன் பெண்ணைக் கொடுப்பதாக முன்வந்தாள், பேய்பிடித்தவளை யார் கட்டிக் கொள்வார்கள்—என்ற எண்ணத்தால். என் சூழ்ச்சிபலித்தது!

அடுத்தமாதம்எனக்கும் சரோஜாவுக்கும் திருமணம்; வந்துசேர்,—என்று அன்பழைப்புஅப்பொழுதே எனக்குத் தந்துவிட்டான், நண்பன்.

திருச்சியில் நடைபெற்ற பேயின் சேஷ்டையின் புதிருக்கு காட்டூரில் எனக்கு விடை கிடைத்தது.

நானும் நண்பனிடம் விடைபெற்று வீடுவந்தேன்—வழியெல்லாம் சூழ்ச்சிக்கு மதிப்பு கொடுக்கும் இந்த நாட்டின் நிலையை எண்ணிக்கொண்டே.

2-ம் பக்கத் தொடர்ச்சி

கள், ஏன்? நாகநாடு நாகருக்கே, என்ற இன முழக்கம், எந்த அளவுக்கு உரம் பெற்றிருக்கிறதோ, அந்த அளவுக்கு, திராவிட நாடு திராவிடருக்கே என்ற முழக்கம் உரம் பெறவில்லை! நாகநாடு கேட்பவர்கள், காட்டும் காரணங்களைவிட, அப்பு அழுக்கற்ற காரணங்கள் உள்ளன நம்மிடம். நாடும் பெரிது, வளமிக்கது! எனினும், திராவிடநாடு திராவிடருக்கே என்ற இன முழக்கத்தின் தரமும் உரமும், இன்னமும் வளரவில்லை! நாகநாடு நாகருக்கே என்ற முழக்கத்தைப்பற்றிய செய்தி கேட்டாவது, திராவிடநாடு திராவிடருக்கே என்ற திட்டத்தை ஆதரிக்க முன் வரலாகாதா, இது வரையில் திராவிட இயக்கத்தில் ஈடுபடாமலிருக்கும் திராவிடர்கள் !! குட்டக் குட்டக் குனிந்து கொண்டிருக்கும் திராவிடக் காங்கிரஸ் தலைவர்களே! டில்லிக்குக் காவடி தூங்கித் தூக்கி அலுத்துப் போயிருக்கும் மந்திரிமார்களே! மத்ய சர்க்கார் யாகாணத்தைச் சரியாகக் கவனிக்கவில்லை என்று கண்டித்துக் கண்டித்துக் களைத்துப் போகும் சட்டசபை உறுப்பினர்களே! மத்ய சர்க்கார் சென்னையை மேலும் கொஞ்சம் அதிகமாகக் கவனிக்க வேண்டும் என்று நாகுக்காக எழுதி எழுதி ஏங்கும் பத்திரிகை ஆசிரியர்களே! திராவிடநாடு திராவிடருக்கே என்ற திட்டத்தை, தேசீயத் திட்டமாக—விடுதலைத் திட்டமாகக்கொண்டு, ஒன்றுபட்டுப் பணியாற்ற முன் வரலாகாதா, என்று கேட்கத் தோன்றுகிறது, நாகர்கள் நாகநாடு கேட்கும் செய்தி பற்றிப் படித்திடும்போது. திராவிடத்தில், அத்தகைய ஒன்றுபட்ட விடுதலை வேட்கையை உருவாக்கும் பணியினை மேற்கொண்டுள்ள, நாம், நாகநாடு பற்றிய செய்தியைக் கேட்கும் போது, புதியதோர் உணர்ச்சியும் புதியதோர் நம்பிக்கையும் பெறுகிறோம். திராவிடநாடு திராவிடருக்கே!!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'பொருளாதார நிலையே முக்கிய காரணம் என்றும் சொல்லலாம்' என முடித்துவிட்டார், ஆச்சாரியார்.

பொருளாதார நிலையே காரணம் என்றால், தென்னாடென்ன பனிமலைப் பிரதேசமா, பாலைவன நாடா? இங்கு என்ன இல்லை? இல்லை என்பதில்லையே. வற்றாத ஜீவநதிகள், கனி குலுங்கும் சோலைகள், கதிர் குலுங்கும் வயல்கள்—இங்கே. தங்கம், நிலக்கரி — பூமிக்கடியிலே — இங்கு பின் ஏன் பொருளாதார பேதம்? அதனால் குற்றங்கள் அதிகரிக்கின்றன என்ற நிலைமை.

காவிலே பிறந்தோம் — கர்ம வினையை அனுபவிக்கிறோம்; நம்மால் எதுவும் ஆகாது, நாதன் விட்ட வழி ஆகட்டும்—அவனைப் பஜிப்போம்—அதுதான் பிறவியின் பயன் என எண்ணி, இரத்தம் சொட்டச் சொட்டப் பாடுபட்டு மிஞ்சிய பணத்தையும் கடவுளுக்கென கரியாக்கி கதியற்ற நிலையில் உலவுகிறான், இந்த நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, மற்றோர் கூட்டம் உல்லாசமாக உழைக்காது வாழுகிறது என்பதைச் சிறிதும் எண்ணாமல்—எண்ணிப் பார்க்காமல்! ஏன்? அவன் அழைத்துச் செல்லப்பட்ட பாதை, அதுதான்!

காயம், பொய்! காற்றடைத்த, பை! முடிவிலோர் பிடிசாம்பலாவர்! என்ற கருத்தற்ற எண்ணங்கள் புகுத்தப்பட்டிருக்கிறது, அவனது உள்ளத்திலே. 'கர்மவினை' எனக் கருத்திலே கொண்டு, கர்மம்போக்க காசைக் கரியாக்கி, கண்ணீர் கலங்கித் தவிக்கிறான்!

இந்த நிலையை மாற்றவேண்டாமா? தன்னிலையை உணரச் செய்யவேண்டாமா? இதனைச் செய்ய வேண்டியவர்கள் யார்? மக்கள் தவறான பாதையில் சென்று மாய்ந்தால், அதைத் தடுக்கும் பொறுப்பை யார் செய்வது? இதைச் சர்க்கார் செய்கிறதா? செய்யாமல் போகிறது! செய்கிறவர்களையாவது தூற்றாமல் இருக்கிறதா?

வரிகளை வசூலிக்கிறது, சர்க்கார்' ஆனால், வளம் கொழிக்கும் திட்டங்களெல்லாம் இங்கில்லை — வடநாட்டில்!

தாமோதர், ஹிராகுட், பக்ரா நங்கல் இவைகளைப் போன்ற கோடிக் கணக்கில் பணம் செலவாகும் திட்டங்களில் எதுவும் தமிழ்நாட்டில் துவங்கவில்லை—ஏன்? நாட்டிலே வறுமை என்றால், நல்ல திட்டங்கள் இங்கேன் இல்லை? பொருளாதார நிலைமை எப்படிச் சீர்ப்படும்!

வறுமை ஓரிடம்! வளம் ஓரிடம்! இந்தப் பேதமேன்? இதைக் கேட்பவர்கள் துரோகிகளா? இதைப் பார்த்து பல்லிளித்துக்கொண்டு பக்கமேளம் தட்டுபவர்கள் துரோகிகளா? யார் துரோகிகள்? யார் பொறுப்பாளிகள்? நிர்வாகத்தில் இருப்பவர்களல்லவா இந்தக் கேட்டினைக் களைய பாடுபடவேண்டும். அப்பொழுதல்லவா பொருளாதார நிலைமைச் சீர்படும்! பொருளாதார நிலைமை இன்று இங்கு சீர்பட வேண்டுமானால் நிர்வாகத்திலுள்ளவர்கள் கேட்டினைக் களைய பாடுபட வேண்டாமா? பாடுபடவில்லை என்றால், நிர்வாகத் திறமையில்லை என்றல்லவா பொருள்படும்!

"நிர்வாகத் திறமை குறைவு காரணமாகத்தான் குற்றங்கள் அதிகரிக்கின்றன என்று நினைப்பானேன்" என முகாரி பாடி, "உண்மையில் பொருளாதார நிலைமையே முக்கிய காரணம் என்றும் சொல்லலாம்" என முடிக்கிறார், முதலமைச்சர்.

நிர்வாகத்தில் திறமை இருந்தால், நாட்டிலே ஏன் பொருளாதார நிலைமை மோசமாகிறது! — இதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருக்கும் ஆச்சாரியார்.

வளம் கொஞ்சிய நாட்டிலே வறுமை! தரணியாண்டவர்கள் — தாசர்கள்! அணைந்த விளக்காய், கவிழ்ந்தகலமாய், தூர்ந்த அகழாய்க் கிடக்கிறார்கள்.

நாட்டுப்பணிக்கு நாட்டாண்மைக்காரர் என்று பாட்டு மீட்டிடும் கூட்டம், இந்தக் கேட்டினைக் களையப் பாடுபடவில்லை, ஏன்?

நூல் இல்லை, பால் இல்லை, நோய் தீர மருந்தில்லை, மக்களுக்குக் கல்வி இல்லை, ஏழைக்கு வழி இல்லை, வயிறார உணவு இல்லை, வசதியாக வீடில்லை, வாய்க்காலில் வளமில்லை, வயலிலே விளைவில்லை, ஊரிலே உற்சாகமில்லை, உள்ளத்திலே உணர்ச்சி இல்லை, படித்தோர் அதிகமில்லை, பண்பாடு துளியும் இல்லை, இந்நிலை தீரவோ இல்லை—ஆனால், ஆண்டவனுக்கு ஆறுகால பூஜையும், வாகனாதிகளுக்கு வெள்ளியும், தங்கமும் குறைவில்லை, நடைபெற்ற வண்ணமே உள்ளன. எப்படி நாட்டின் நலிவு நீங்கும்? ஒரு பக்கம் பணம் முடங்கிக் கிடக்கிறதுவீணாக, ஆண்டவன் பெயரால்!—மற்றோர் பக்கம் இல்லாமையால் மக்கள் அவதிப்படுகின்றனர். இதை எடுத்துக்கூறும் நயக்கு நாத்திகப் பட்டம்!

அறிவு, ஆண்டவன் பெயரால் நடைபெறும் புரட்டுகளுக்கு அடிமை! நாடு, வடநாட்டானுக்கு அடிமை! இந்நிலையில் நாடு பொருளாதார பேதம் நீங்கி நன்னிலை அடைவது எப்படி? குற்றங்கள் குறைவது எப்படி?

வறுமை ஒழியவேண்டுமானால்—பொருளாதார பேதம் நீங்கவேண்டுமானால், மக்களின் மனமாசு — மடைமை ஒழியவேண்டும் — ஒழிக்கப்படவேண்டும். மடைமை ஒழிய வேண்டுமானால் ஆரியக்கற்பனையாம் மதமும் ஜாதிகளும் ஒழியவேண்டும்! வடநாட்டாரின் பிடி ஒழிந்து நாடு தன்னாட்சியுற வேண்டும்!

காஞ்சிபுரம்
அறிவுவளர்ச்சி கழக
முதல் ஆண்டு விழா

29—3—53 மாலை செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை எம். சி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கலைஞர் மு. கருணாநிதி, புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், ஆகியோர் கலந்து கொண்டனர். பகுத்தறிவியக்கப் பணியின் சிறப்புப் பற்றியும் பொது மக்களிடம் அதற்குள்ள நல்லெண்ணத்தைப் பற்றியும் விளக்கமாக, நல்ல எடுத்துக் காட்டுக்களுடன் தோழர் கண்ணதாசன் துவக்க உரையாற்றினார். அடுத்து தோழர் கருணாநிதி பேசுகையில் மக்களின் மனநிலை, சீர்கெட்டதற்கான காரணங்களை விளக்கி, நாட்டிடை நல்லுறவு வளர்வதற்கும் மக்கள் வாழ்வில் மறு மலர்ச்சி ஏற்படுவதற்கும், அறிவுவளர்ச்சியடைய வேண்டும் என்றும், அந்தப்பணியை இடையறாதாற்றிவருவதுதான் தி. மு. க. என்றும், தன்னைப் போன்றவர்கள் கலைத்தொண்டாற்றுகையில் கொள்கை வழுவிவிடுவார்கள் எனும் அச்சம்யாருக்கும்தேவையில்லை என்றும், பகுத்தறிவுவாடைவீசாத இடங்களில் எல்லாம் கொள்கைத் தென்றல் வீசச்செய்து, அங்கிருப்பவர்களையும் நம் பக்கம் கொண்டு சேர்க்கும் பணியினை தொடர்ந்து செய்து வருவதாகவும், அதன் விளைவே நண்பர்கள் எம். ஜி. ராமச்சந்திரன், கே. ஆர். ராமசாமி, சிவாஜி கணேசன் போன்றவர்கள் நமதியக்கப் பணியாற்றுவது என்றும் குறிப்பிட்டார்.

தி. மு. க-வில் உடனே உழைப்பினனாக விழைகிறேன் என்று அடுத்து பேசிய தோழர் எம். ஜி. ராமச்சந்திரன் குறிப்பிட்டார். விழாத்தலைவர் இறுதியுரையாற்றிய பின், தோழர் கச்சபாலையம் நன்றி கூற விழா முடிவுற்றது.

★

★ திருச்சி மாவட்ட தி. மு. க. மாநாடுகள் ★

லால்குடி பாண்டியனார் அரங்கில்

25—4—53 சமுக சீர்திருத்த மாநாடு

தலைவர் அ. பொன்னம்பலனார்
திறப்பாளர் இராமாமிர்தத்தம்மையார்

26—4—53 மாவட்ட இரண்டாவது தி. மு. க. மாநாடு

தலைவர் ஈ. வி. கே. சம்பத்
திறப்பாளர் கே. ஏ. மதியழகன்

சொற்பொழிவாளர்கள்

பொதுச்செயலாளர் அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன். சி. பி. சிற்றரசு, 'மு. கருணாநிதி, என். எஸ். இளங்கோ, எஸ். கே. சாமி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, க. அன்பழகன், என். வி நடராசன், இராசு—தங்கப்பழம், தில்லை—வில்லாளன், அரங்கண்ணல், தாமரைச்செல்வன், இளம்வழுதி, கண்ணதாசன், சத்தியவாணிமுத்து, பூங்கோதை, அருண்மொழி.

கலைக் கண்காட்சித் திறப்பாளர்

நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி

கலைச் சொற்பொழிவாளர்கள்

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், எம். ஜி. ராமச்சந்திரன், சிவாஜி கணேசன்

இன்னிசை: இசை முரசு நாகூர் அனீபா, செல்லமுத்து

மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டசபை உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள்

இரண்டு நாட்களிலும்

அண்ணாதுரை, கருணாநிதி, கே. ஆர். ராமசாமி, எஸ். எஸ். ராஜேந்திரன் நடிக்கும்

"சந்திரோதயம்" "காதல்ஜோதி"

நாடகங்கள் நடைபெறும்.

இரண்டு நாட்களுக்கும் கட்டணம் (நாடகம் உள்பட) ரூ. 5, 2, 1. பெண்கள் அணா 8.

டி. பி. அழகமுத்து, பொருளாளர். எம். எஸ். மணி-ஜி பராங்குசம், செயலாளர்கள். அம்பில் தர்மலிங்கம் வ. கு. தலைவர்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram